RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1716

# சங்க கால ஆயர் - இனவரைவியல் பார்வை

ஜெ. அமுதா [அ, *]

[அ] தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா

# The Shepherds of the Sangam Age - Ethnographic View

**J. Amutha** [a, *]

[a] Department of Tamil Studies, Sri Kaliswari College (Autonomous), Tamil Nadu, India

* Corresponding Author: amuthapriyanka@gmail.com

Received: 02-03-2022
Revised: 19-10-2022
Accepted: 27-10-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

Humans lived in mountains and caves in the early days of human history. Later, due to the increase in population, they went to the forest edifice of Mullai land. They domesticated and reared animals like buffalo, cows, and goats for the needs of their lives. Since sheep and cattle are multiplying rapidly in this land, they should have stayed there and established their lives. Therefore, it can be said that Mullai land shepherd communities were formed there. The fact that Mullai land was the abode of the gods under the banyan tree and near the water resources indicates that these places were places of worship. Only Mullaikali speaks of embracing bulls as a symbol of the tradition of the people of Mullai land. It can be seen that there was a custom of marrying the shepherds of Mullai land. This article is aimed at examining the way in which they lived in harmony with their lives by considering cattle as wealth.

**Keywords:** Mullai land, Shepherd Community, Worship, Mullaikali.

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் பாட்டும் தொகையும் என்று குறிப்பிடப்படும் 'பாட்டு' என்பது பத்துப்பாட்டையும் 'தொகை' என்பது எட்டுத்தொகையையும் குறிக்கும்.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம்என்று
இத்திறத்த எட்டுத் தொகை"

எனும் பாடலில் கூறப்படும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று கலித்தொகை ஆகும். கலித்தொகை 150 பாடல்களைக் கொண்டது (Viswanathan, 2007). இந்நூலில் நான்காவதாக முல்லைக்கலி இடம்பெற்றுள்ளது. 17 பாடல்களைக் கொண்டது. முல்லைக்கலியைப் பாடியவர் சோழன் நல்லுருத்திரன் ஆவார். முல்லைக்கலியில் இடம்பெறும் முல்லை நில மக்களின் வாழ்வியலை இனவரைவியல் பார்வையில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## இனவரைவியல்

இனவரைவியல் என்பது களப்பணியை அடிப்படையாகக் கொண்ட கண்ணோட்டம் ஆகும். மானிடவியலார் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அல்லது ஏதேனும் ஒரு துணைப் பண்பாட்டைப் பற்றி, அப்பண்பாட்டைக் கொண்டிருக்கும் மக்களோடு குறிப்பிட்ட காலம் வரையில் தங்கியிருந்து அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் பங்கேற்று ஆராய்ந்து வெளிப்படுத்துவது (Dhananjeyan, 2006).

## முல்லை நிலம்

பண்டைத் தமிழர்கள் பாகுபடுத்திய ஐவகை நிலங்களுள் ஒன்று முல்லைத் திணையாகும்.

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்

முற்படக் கிளந்த எழுதிணை என்ப"

காடும் காடு சார்ந்த இடமும் முல்லைத் திணைக்குரிய நிலமாகும். முல்லைத்திணைக்குரிய பெரும்பொழுது கார்காலம் (Tamizhannal, 2009). சிறுபொழுது மாலையாகும். இதனைத் தொல்காப்பியர் அகத்திணையியலில்

"காரும் மாலையும் முல்லை"

முல்லைத் திணையின் கருப்பொருள்களை கீழ்க்கண்டவற்றை அகப்பொருள் விளக்கம் எனும் நூலில் நாற்கவிராச நம்பி, தெய்வம் - திருமால், மக்கள் - நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி (உயர்ந்தோர்), இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் (தாழ்ந்தோர்), விலங்கு - மான், முயல், ஊர் - பாடி, நீர் - சுனை நீர், காட்டாற்று நீர், பூ - குல்லை, முல்லை, தோன்றி, பிடவம், மரம் - கொன்றை, காயா, குருந்தம், உணவு - வரகு, சாமை, முதிரை, பறை - ஏற்றுப்பறை, யாழ் - முல்லையாழ், பண் - சாதாரி, தொழில் - சாமை, வரகு விதைத்தல், கட்டல், அரிதல், கடாவிடல், கொன்றைக் குழல் ஊதல், ஏறுதழுவுதல், குரவைக்கூத்து ஆடல், கான்யாறு ஆடல் (Suthamathi, 2016) முதலியவற்றைக் குறிப்பிடுகிறார் (Tamizhannal, 2009).

## மக்கள்

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே வாழ்ந்து வரும் திணைநில மக்கள் குறவர், எயினர், ஆயர், பரதவர் எனும் திணைப்பெயருடன் வாழ்ந்து வந்தனர் என்பதைத் தொல்காப்பியம்,

"பெயரும் வினையுமென்று ஆயிரு வகைய

திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே"

என்ற நூற்பா மூலம் அறியலாம் (Tamizhannal, 2009).

1. ஆ என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது ஆயர் ஆகும்.

2. குறிஞ்சி, மருதம் இவற்றிற்கு இடைப்பட்ட நிலம் முல்லையாதலால் அந்நிலத்தில் வாழ்பவர் இடையர் (முல்லையார்) எனப்பட்டனர்.

3. எல்லா நிலத்திற்கும் தேவையான உணவுப் பொருட்களாகிய பால், வெண்ணெய், தயிர், மோர் தருபவராதலால் 'பொதுவர்' எனப்பட்டனர்.

4. முல்லைவாழ் மக்களில் 'மாடுகாப்போர் (கோவினத்தார்), ஆடுமேய்ப்போர்' என்னும் இரண்டு பிரிவுகள் இருந்தனர்.

5. கலித்தொகையில் ஆயர் தம்மைப் பாண்டியன் குடியினை ஒத்தவன் எனப் பெருமை கூறிக் கொண்டதால் 'கோன்', 'கோனார்' என்ற குடிப்பெயர்கள் வழங்குகின்றன எனலாம் (Azhagumalai, Sadhasivam, 2002).

"ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர்

ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே"

என்ற நூற்பாவின் மூலம் முல்லை நிலத்தில் வாழும் ஆடவரை ஆயர் என தொல்காப்பியர் சுட்டியுள்ளதைக் காணலாம் (Tamizhannal, 2009). ஆநிரைகள் மிகுதியாக உள்ளதால் அவற்றைப் பசுமை நிலங்களில் மேய்த்துக் காப்பாற்றும் தொழில் அவர்களுக்கு உரியதால் ஆவினை மேய்ப்பார் 'ஆயர்' என வழங்கப்பட்டனர். ஆயருள் ஆடு, மாடுகளை மேய்த்தவர் ஆட்டிடையர் என அழைக்கப்பட்டனர். புல்லினத்தார் அல்லது குறும்பர் எனவும் அழைக்கப்பட்டனர். பசு இடையர் கோஇனத்தார் என்றும் நல்லினத்தார் என்றும் கூறப்பட்டனர். முல்லைக்கலியில்

"கோட்டினத்து ஆயர் மகன்"

"கோவினத்து ஆயர் மகன்"

"புல்லினத்து ஆயர் மகன்"

என ஆயரை வேறுபடுத்துவதைக் காணலாம் (Viswanathan, 2007).

## விளையாட்டு

முல்லை நிலத்தில் வாழும் பெண்கள் சிற்றில் இழைத்து விளையாடும் வழக்கம் காணப்படுவதை

"முற்று இழை ஏஎர் மடநல்லாய்! நீ ஆடும்

சிற்றில் புனைகோ சிறிது என்றான்"

என்ற அடிகளின் வழி உணரமுடிகிறது (Viswanathan, 2007).

## தொய்யில் எழுதுதல்

சங்க காலத்தில் மகளிர் மார்பு, தோள் முதலிய இடங்களில் சந்தனக் குழம்பு கொண்டு வரிக் கோலம் செய்வர். இதனைத் தொய்யில் எழுதுதல் எனக் கூறுவர். தோழியர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கும் தலைவியிடம் சென்று தலைவன் தன் அன்பை வெளிப்படுத்தும் போது

"ஐய பிதிர்ந்த சுணங்கு அணிமென் முலைமேல்

தொய்யில் எழுதுகோ மற்று" என்றான்"

என முல்லைக்கலியில் அமைந்துள்ளது (Viswanathan, 2007).

## மலரணிதல்

ஆநிரைகளை மேய்க்கும் தொழிலுடைய முல்லை ஆயர் ஏறுதழுவுவதற்குச் செல்லும் போது கொத்தாகப் பூத்திருக்கும் கொன்றை, முள்ளைப் புறத்தே உடைய பிடவம், நீலமணி போன்றகாயா, கோடல், முல்லை, குல்லை, குருந்தம் முதலிய மலர்களைக் கண்ணியாகத் தொடுத்து மாலை அணிந்து வந்தனர் என்பதை கீழ்கண்ட வாடலடிகள் புலப்படுத்துகின்றன.

"ஞெலிபு உடன் நிரைத்த ஞெகிழ் இதழ்க் கோடலும்

மணிபுழர உருவின காயாவும் பிறவும்

அணிகொள் மலைந்த கண்ணியர்" (Viswanathan, 2007)

## திருமணம்

தமிழில் திருமணம் என்ற சொல்லுக்கு கூடுதல் என்பது பொருளாகும். மனமொத்து வாழ்வு முழுவதும் மணம் பெற்று நிகழ்வதற்கு காரணமான இந்நிகழ்ச்சியை மணம் என்று பெயரிட்டனர். சிறப்பான ஒன்றைக் குறிப்பிட 'திரு' என்ற அடைமொழிக் கொடுத்து அழைப்பது தமிழர் மரபு. தமிழர் வாழ்வின் அடிப்படையாக மணம் 'திருமணம்' என்று அழைக்கப்படுகிறது.

மணத்தைக் குறிக்கப் பல்வேறு சொற்கள் தமிழில் பயன்படுத்தியுள்ளனர். கடி, மணம், மன்றல், வதுவை, வதுவை மணம், வரைவு என்பன ஆகும். கலித்தொகையில் வரைவு என்ற சொல் கையாளப்பட்டுள்ளது.

முல்லை நிலத்தில் வாழும் மகளிர் ஏறுதழுவும் ஆடவரையே மணம் செய்து கொள்வர். அதனால் ஒவ்வொரு பெண் வீட்டிலும் ஏறு வளர்க்கப்படும். ஏறு தழுவாத ஆண்மகனைப் பெண்ணும் விரும்பமாட்டாள். தலைவியின் தந்தையோடு அவள் தமையன்மாரும் உடனிருந்து அவளது திருமணத்திற்கு சம்மதம் தெரிவிப்பர். திருமணம் பெண் வீட்டில் நடைபெறும் வழக்கம் உள்ளது.

திருமணத்தின் போது புதுமணல் பரப்பி வீட்டை அழகுபடுத்துவர். குவித்த மணலை எல்லா இடங்களிலும் பரப்பி இல்லத்தைச் செம்மண் பூசி தெய்வமாகப் பெண் எருவையின் கொம்பினை வைத்து திருமணம் செய்யும் வழக்கம் உள்ளது.

"தருமணல் தாழப்பெய்து இல் பூவல் ஊட்டி

எருமைப் பெடையொடு எமர் ஈங்கு அயரும்"

திருமணம் நிகழும் இடத்தை அலங்கரித்தல், பொருளாதாரத்திற்கு முதன்மையாக இருக்கும் விலங்கின் கொம்பினை வைத்தும், மங்கல ஒலியை எழ வைத்தும் திருமணம் நிகழ்த்தும் வழக்கம் இருந்துள்ளமையை காணலாம் (Viswanathan, 2007; Murugalakshmi, 2022).

## குரவைக் கூத்து

குரவைக் கூத்து என்பது கூத்தின் ஒரு வகையாகும். இக்கூத்து பழங்காலம் முதல் காணப்படுகிறது. போர்நிகழும் காலத்திலும் ஏதேனும் தீங்கு நிகழுமோ என்ற அச்சம் உண்டாகும் நிலையிலும் பொழுதுபோக்காகவும் கூத்து நிகழ்த்துதல் உண்டு.

ஏறுதழுவுதல் முடிந்த பின் ஆய்ச்சியர் மேயும் புலத்திலே பரவலாக மாடுகளைப் போகவிட்ட தம் அன்புமிக்க காதலருடைய கைகளைக் கோர்த்துக் கொண்டு இன்பத்துடன் குரவைக் கூத்தாடுவர் என்பதை

"தம்புல ஏறு பரந்தர உய்த்த தம்

அன்புறு காதலர் கையிணைந்து ஆய்ச்சியர்

இன்புற்று அயர்வர் தழூஉ"

என்ற அடிகளின் வழி அறியலாம் (Viswanathan, 2007).

## நிமித்தம் பார்த்தல்

தலைவிக்குத் தோழி ஏறுதழுவலின் போது பல ஆயர் இளைஞர்கள் குடல் சரிந்து வீழ்வதையும் ஏறு தன் கொம்பு நுனியினால் குத்திக் குலைப்பதையும் காட்டுகிறாள். அப்போது தலைவி நம் தலைவனுக்கும் இவ்வாறு ஆகுமோ என அஞ்சுகிறாள். அந்நிலையில் அங்கு உண்டான நன்னிமித்தம் கண்டு தோழி தலைவியின் அச்சத்தைப் போக்குகிறாள்.

"அணிமாலைக் கேள்வன் தரூஉமார், ஆயர்

மணிமாலை ஊதுங் குழல்" (Viswanathan, 2007)

“தாளாண்மை கூறும் பொதுவன் நமக்கு ஒருநாள்

கேளாளன் ஆகாமை இல்லை அவற்கண்

வேளாண்மை செய்தன கண்”

என்ற பாடலடிகள் மூலம் மாலை நேரத்தில் உண்டான குழலின் ஓசையும் இடக்கண் துடித்தலும் நன்னிமித்தமாக அமைந்துள்ளது (Viswanathan, 2007).

## ஏறு வகை

முல்லை நிலத்தில் வாழும் மக்களுக்கு ஆடு, மாடு இனங்கள் முதன்மையாக அமைந்தன. காற்றைப் போலச் சினந்து விரைந்து வரும் காரி எருது, புள்ளிகள் நிறைந்த வலிய வெள்ளேறு, பால் போன்ற நிறமுடைய பலராமனைப் போன்ற குற்றம் நீங்கிய வெள்ளை எருது, மாயோனின் நிறமுடைய கரிய எருது, சிவபெருமானின் உருவினை ஒத்த கபிலை நிற எருது உள்ளிட்ட எருதுகளை வைத்திருந்தனர். இதனை,

“மணிவரை மருங்கின் அருவி போல

அணிவரம்பு அறுத்த வெண்காற் காரியும்

மீன்பூத்து அவிர்வரும் அந்திவான் விசும்பு போல்

வான்பொறி பரந்த புள்ளி வெள்ளையும்”

எனும் அடிகளின் வழி பல்வகை நிறமுடைய எருதுகள் இருந்தமையை அறியலாம் (Viswanathan, 2007).

## ஏறு தழுவுதல்

தமிழரின் வீர உணர்வைக் காட்டுவது ஏறு தழுவுதல் ஆகும். கலித்தொகையில் இடம்பெறும் முல்லைக்கலியில் ஆயர்களிடம் நிகழும் மணச்சடங்கு. ஆயர்கள் தங்கள் பெண்களை மணக்கும் ஆடவரின் திறனை மதிப்பிட மேற்கொண்ட வீர விளையாட்டு ஏறுதழுவுதல் என்பர். காளையை அடக்கித் தழுவி நிற்பவனுக்கே தலைவி உரியவள் என்ற குறிக்கோளுடன் ஏறு வளர்த்தனர். அவ்வேற்றினைத் தழுவி ஆயர் மகளை மணப்பதற்கு துணிந்தவர்களாக ஆயரிளைஞர்கள் இருந்தனர். முல்லை நில ஆயர்கள் ஆடு, மாடு ஆகிய விலங்குகளை வளர்த்துப் பேணி பாதுகாக்கும் தொழிலுடையவர்களாகக் காணப்பட்டனர். இவ்விலங்குகள் அவர்களின் பொருளாதார வாழ்க்கைக்கு முதன்மை ஆதாரமாக அமைந்தது. அதனால் பெரிய விலங்குகளிடமிருந்தும் கள்வர்களிடமிருந்தும் பாதுகாப்பது அவர்களது தலையாய கடமையாதலால் வீரம் உடையவர்களாக இருக்க வேண்டும். இதனால் ஆயர் தம் மகளைத் திருமணம் செய்து கொடுக்க அவர்களின் ஆற்றலை அறிந்த பின்னர் அவர்களுக்கே மணம் செய்து கொடுத்திருக்கலாம்.

பொருள் கொடுத்தும், சேவை புரிந்தும் மணத்தல், திறமையை வெளிக்காட்டும் வகையில் வீரத்தின் காரணமாக மணத்தல், போர் நிகழ்த்தி மணத்தல், தன் காதல் மிகுதியைக் காட்டி மணத்தல் ஆகிய இம்மணமுறைகள் களவு, கற்பு ஆகிய நெறிகளில் இருந்தது. சங்க இலக்கியங்களில்

1. மரபுவழி மணம்
2. சேவை மணம்
3. போர்நிகழ்த்தி மணம்
4. துணங்கையாடி மணம்
5. பரிசம் கொடுத்து மணம்

6. ஏறு தழுவி மணம்

7. மடலேறி மணம் ஆகிய மணமுறைகளைக் கண்டறியலாம். அவற்றுள் முல்லைக்கலியில் ஏறுதழுவி மணம் செய்து கொள்ளும் முறை காணப்படுகிறது.

ஏறுதழுவுதல் என்பது வலிமைமிக்க ஏற்றைத் தழுவி அடக்குதல் ஆகும். முல்லைக் கலியில் உள்ள 7 பாடல்கள் ஏறுதழுவுதல் பற்றிக் கூறுகின்றன.

"பொருப்புகல் நல்லேறு கொள்பவர் அல்லார்

திருமாமெய் தீண்டலர்"

என்ற அடிகளின் வழி ஆயர் குல மகளிர் ஏறுதழுவும் ஆடவனையே மணம் செய்து கொள்வர் என்பதை அறியலாம் (Viswanathan, 2007). ஆயர்கள் ஏறுதழுவுவதற்காகச் செல்லும் ஏற்றின் கொம்பு சீவுதல் மற்றும் வண்ணம் தீட்டுதல், பொட்டிடுதல், சலங்கை கட்டுதல், சுட்டி சூடல் ஆகிய ஒப்பனைகளைச் செய்வர் என்ற கருத்துகளை

"மயில்எருத்து உறழ்அணி மணிநிலத்துப் பிறழ"

"சுடர்விடுத்தன்ன சுரி நெற்றி காரி"

காணமுடிகிறது (Viswanathan, 2007).

ஏறு தழுவும் ஆயர் இளைஞர் ஏறு தழுவும் காட்சியினைக் கீழ்க்கண்ட பாடலடிகள் காட்சிப்படுத்துகின்றன.

"எழுந்தது துகள்

ஏற்றனர் மார்பு

கலங்கினர் பலர்" (Viswanathan, 2007)

## தொழில்

ஆடு, மாடுகளை மேய்ப்பதை முல்லை நில மக்கள் முதன்மைத் தொழிலாகச் செய்தனர். அவர்கள் பால் கறப்பதற்குரிய கறவைக்கலங்கள் உறியோடு கழுவுடன் சுடுகருவிகளையும் இட்டுச் சுருக்கிய தோற் பையையும் தூக்கிக் கொண்டு செல்வர். நீண்ட வளர்ந்த கொன்றைக் காயைக் கொண்டு உருவாக்கிய குழலில் இனிய ஓசையை இசைப்பர். தம்முடைய இனமாகிய பசுக்களை அவ்வப்போது பெய்த மழையினால் நனைந்த அகன்ற நிலத்தில் ஓட்டிச் செல்வர் என்பதைக் கீழ்க்கண்ட பாடல் அடிகளின் வழி அறியலாம்.

"கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்

இமிழிசை மண்டை உரியோடு தூக்கி

ஒழுகிய கொன்றை தீங்குழல்"

இதன்வழி மேய்ச்சல் தொழிலுக்குச் செல்லும்போது கிட்டி, கரவைக்களம், குழல் ஆகியவற்றை எடுத்துச் செல்லும் வழக்கம் இருந்தமையை அறிய முடிகிறது (Viswanathan, 2007). பசுவிடமிருந்து கரந்து எடுக்கப்படும் பாலை நன்கு காய்ச்சி தயிராக்குதல், தயிரைக் கடைந்து வெண்ணெய், மோர் ஆகியவற்றை உருவாக்கி, அவற்றை விற்கும் தொழில் உடையவராக வாழ்ந்துள்ளனர் என்பதை,

"திளைத்தற்கு எளிய மாக்கண்டை அளைக்கு எளியாள்

வெண்ணெய்க்கும் அண்ணல் எனக் கொண்டாய்"

இவ்வடிகள் எடுத்துரைக்கின்றன (Viswanathan, 2007).

## சூளுரைத்தல்

உலகில் வாழும் எல்லா மக்களிடத்தும் சூளுரைத்தல் வழக்கமுண்டு. ஒருவர் தாம் கூறும் செயலைப் பிறர்க்குத் நம்பகத் தன்மை உண்டாக்க சூளுரைத்தல் வழக்கம். அவ்வாறு சூளுரைக்கும்போது தெய்வத்தின் மீது சூளுரைத்தால்தான் பிறர்க்கு நம்பிக்கை ஏற்படும். முல்லை நிலத்து மக்களிடமும் இவ்வழக்கம் காணப்பட்டது. தலைவனும் தலைவியும் முன்னொரு நாள் கூடி, பின்னர் எதிர்ப்படுகின்றனர். அப்போது தலைவன் பரத்தமை மேற்கொண்டதன் காரணமாக ஊடல் கொள்கிறாள். அதுகேட்ட தலைவன், தலைவியைத் தெளிவுபடுத்துவதற்காகத் திருமாலின் திருவடிகளைத் தலையினால் வணங்கி, கையினால் தொட்டுச் சூளுரைத்தான் என்பதை,

"இணைவனப்பின் மாயோய் நின்னின் சிறந்தார்

நிலவுலகத்து இன்மை தெளி நீவருதி

மலையொடு மார்பு அமைந்த செல்வன் அடியை

தலையினால் தொட்டு உற்றேன் சூள்"

இப்பாடலடிகள் சுட்டுகிறது. முல்லை நிலத் தெய்வமாகிய திருமாலின் மீது சூளுரைத்தல் வழக்கம் இருந்தமையை அறியலாம் (Viswanathan, 2007).

## முடிவுரை

மூவின ஆயர் முல்லை நிலத்தில் வாழ்ந்துள்ளனர் என்பதைக் கண்டறியமுடிகின்றது. முல்லைநில ஆய்ச்சியர் ஏறுதழுவுதற்கு முன்பும் பின்பும் குரவைக் கூத்து ஆடும் முறை இருந்தமையை உணரமுடிகிறது. முல்லை நிலக் கடவுளாகிய திருமாலின் திருவடிகளைத் தலையினால் வணங்கி, கையினால் தொட்டுச் சூளுரைக்கும் வழக்கம் இருந்தமையைச் சுட்டுகிறது. முல்லை நிலக் கடவுளர் வாழும் இடமாக ஆலமரத்தின் கீழும் நீர்த்துறைக்கு அருகிலும் இருந்தமையால் அவ்விடங்களை வழிபாட்டிற்குரிய இடமாக இருந்தமையைப் புலப்படுத்துகிறது. முல்லை நில மக்களின் மரபு அடையாளமாக ஏறுதழுவுதல் என்பதை முல்லைக்கலி மட்டுமே எடுத்துரைக்கின்றது. முல்லை நில ஆயர்களிடம் ஏறுதழுவியே மணம் செய்யும் வழக்கம் காணப்பட்டதைக் கண்டறியமுடிகிறது.

## References


Azhagumalai, R., Sadhasivam, R. (2002) Senthamizh, Madurai Tamil Sangam, Madurai, India.

Dhananjeyan, A. (2006) Vilimbunilai Makkal Vazhakkaarugal, Vallinanam Pathippagam, Chennai, India.

Murugalakshmi, A. (2022) Lifestyles of Mullaikali people, International Research Journal of Tamil, 4(SPL 1), 253-258. https://doi.org/10.34256/irjt22s135

Suthamathi, R. (2016) Naarkavirasa Nambi Iyatriya Agapporul Vilakkam, New Century Book House, Chennai, India.

Tamizhannal, (2009) Tholkkapiyam, Koviloor Madalayam, Koviloor, India.

Viswanathan, A. (2007) Kalithogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License